செ. கு. எண் :- 44 நாள் :- 29.01.2012.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை - 29.1.2012

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், அம்பத்தூர் தொலைபேசி இணைப்பகம் அருகில் 27.1.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது மாநகர அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருமுல்லைவாயல், ஸ்ரீநகரைச் சேர்ந்த திரு. ராம்கிஷோர் என்பவரின் மகன் வர்ஷன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், சிட்லகாரன்கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த திரு. காளியப்பன் என்பவரின் மகன் திரு. பழனி 27.1.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் மாட்லாம்பட்டி பிரிவு சாலையில் சென்று கொண்டிருந்தபோது, தருமபுரியிலிருந்து கிருஷ்ணகிரி சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திரு. வர்ஷன் மற்றும் திரு. பழனி ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயர சம்பவங்களில் காலமான திரு. வர்ஷன் மற்றும் திரு. பழனி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9